DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**CC. No. 104/2025**

**Deposition of LW1 examined as PW1** (complainant) Dt. 10.06.2025

| | |
|---|---|
| Name | விஜயகுமார் (தேர்தல் துணை வட்டாய்சியர், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்) |
| Father's/Husband's Name | வெங்கடாசலம் |
| Village | மயிலாடுதுறை |
| Taluk | |
| Age | 48/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 10.06.2025

(A1,A2 present)

**முதல் விசாரணை**

நான் தற்போது மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தேர்தல் துணை வட்டாய்சியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.01.2023 ம் தரங்கம்பாடியில் வட்ட வழங்கல் அலுவராக பணியில் இருந்த போது இரவு 9.30 மணியளவில் கஞ்சாநகரம் கிராம நிர்வாக அலுவலர் மணிகண்டன்என்பவர் கொடுத்த தகவலின் அடிப்படையில் கஞ்சாநகரம் பேருந்து நிறுத்தம் அருகே உள்ள ஸ்ரீராம் பெல்ட்பென்சிங் என்ற கடைக்கு பின்புறம் உள்ள கீற்று கொட்டகையில் டார்ச் லைட் வெளிச்சத்திலும் தெருவிளக்கு வெளிச்சத்திலும் பார்த்த போது சுமார் 50 கிலோ எடை கொண்ட 300 வெள்ளை நிற சாக்குமூட்டைகளில் ரேசன் அரிசி பதுக்கி வைத்திருந்தார்கள். ஒரு தையல் மிசின் மற்றும் ஒரு எடை மிசின் ஆகியவையும் கீற்று கொட்டகையில் இருந்தது. டாடா ஏசி வாகனம் பதிவெண் TN51 AZ3935 கீற்று கொட்டகைக்கு வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டாடா ஏசி வாகனத்தில் 50 கிலோ எடை கொண்ட வெள்ளை நிற சாக்குமூட்டையில் உணவு பொருளாக பொது விநியோக திட்டதிற்காக பயன்படுத்தி வரும் ரேசன் அரிசி 10 மூட்டை அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. அந்த சமயம் பொது மக்கள் சம்பவ இடத்தில் கூடிவிட்டனர். அவர்களிடம் கீற்று கொட்டகையின் உரிமையாளர்யார் என்று விசாரித்த போது அதே கிராமத்தை சேர்ந்த கலியபெருமாள் மகன் மோகன்தாஸ் என்பது தெரியவந்தது. மோகன்தாஸை விசாரணை செய்த போது தான் அந்த கீற்று கொட்டகையை அதே கிராமத்தை சேர்ந்த சேகர் மகன்களான அப்பு என்கிற சத்தியசீலன் மற்றும் பிரசாத் என்பவர்களுக்குரூ. 3000/- வீதம் மாத வாடகைக்கு கொடுத்துள்ளதாக தெரிவித்தார். பின்னர் உணவு பொருள் கடத்தல் தடுப்பு பிரிவு தகவல் கொடுத்தேன். மேற்படி எடை மிசின், தையல் மிசின், டாடா ஏசி வாகனம் போலீசாரிடம் ஒப்படைக்கப்பட்டது. சுமார் 15000/- கிலோ எடை கொண்ட 310 மூட்டைகளை ஆக்சுவர்

கிடாரங்கொண்டான் உணவு பொருள் சேமிப்பு கிடங்கு மேலாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. சாட்சிகள் தனிவருவாய் அலுவலர் மரியஜோசப்ராஜ் மற்றும் கஞ்சாநகர் கிராம நிர்வாக அலுவலர் மணிகண்டன் ஆகியோர் முன்னிலையில் மேற்கண்ட வழக்கு பொருட்களை கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து காவல் ஆய்வாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மேற்கண்ட குற்ற செயலுக்கு நடவடிக்கை எடுக்க எதிரிகள் மீது புகார் கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார் மனு அ.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **கைப்பற்றுதல் மகசர் அ.சா.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

குற்ற சம்பவம் தொடர்பாக பொதுமக்கள் யாரேனும் புகார் கொடுத்தார்களா என்றால் இல்லை. கிராம நிர்வாக அலுவலர் தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு சென்றோம். கிராம நிர்வாக அலுவலர் புகார் ஏதேனும் கொடுத்தாரா என்றால் இல்லை அலைபேசி வாயிலாக தகவல் தெரிவித்தார். 9 மணியில் இருந் து 9.15 இருக்கும் அப்போது கிராம நிர்வாக அலுவலர் அலைபேசி வாயிலாக தகவல் தெரிவித்தார். அந்த சமயம் நான் வீட்டில் இருந்தேன். சம்பவ இடம் எனது வீட்டில் இருந்து சுமார் 6 அல்லது 7கிலோ மீட்டர் இருக்கும். சம்பவ இடத்திற்கு நான் எவ்வாறு சென்றேன் என்றால் எனது இருசக்கர வாகனத்தில் சென்றேன். கிராம நிர்வாக அலுவலர் நான் சம்பவ இடத்திற்கு சென்ற போது அங்கு இருந்தார். சம்பவ கிராமத்தை சேர்ந்த சுமார் 15 நபர்கள் அங்கு இருந்தார்கள். நான் தயார் செய்த கைப்பற்றுதல் மகசரில் பொது மக்கள் யாரிடமும் சாட்சி கையொப்பம் பெறவில்லை என்றால் சரிதான். அவ்வாறு பெறாதற்கு ஏதேனும் காரணம் உள்ளதா என்றால் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்த நேரத்தில் பொது மக்கள் யாரும் இல்லை. கைப்பற்றுதல் மகசர் **30.01.2023** இரவு **10.00** மணிக்கு தயார் செய்தேன். சோதனை ஜாபிதா ஏதும் தயார் செய்தேனா என்றால் நினைவில் இல்லை. அரிசி மூட்டைகள் என்னவிதமாக இருந்தது என்றால் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. அவற்றை கிராம நிர்வாக அலுவலர் எண்ணி எண்ணிக்கை கூறினார். மேற்படி விபரத்தை எனது புகாரிலோ போலீசார் விசாரணையிலோ குறிப்பிட்டு கூறிவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் அரிசியை என்றைய தினம் ஒப்படைத்தீர்கள் என்றால் மறுநாள் ஒப்படைத்தேன். கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் அரிசியுடன் நானும், காவல் ஆய்வாளரும், காவலர் ஒருவரும், கிராம நிர்வாக அலுவலருமும், குடிமைபொருள் வழங்கல் தனி வருவாய் ஆய்வாளர் திரு. மரியஜோசப் ஆகியோர் விடிந்து அரிசி மூட்டைகளை ஒப்படைக்கும் வரை சம்பவ நடந்ததாக கூறப்படும் இடத்தில் தான் இருந்தோம். அருகில் உள்ள செம்பனார் கோவில் காவல் நிலையத்திற்கு எந்த தகவலும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். காவல் ஆய்வாளர் எந்த ஊரில் பணிபுரிகிறார் என்றால் அரியலுரில் பணிபுரிகிறார். மயிலாடுதுறைக்கு பொறுப்பு அதிகாரி ஆவார். தகவல் கொடுத்து எத்தனை மணிக்கு ஆய்வாளர் வந்தார் என்றால் இரவு **11.00**

மணிக்கு வந்தார். காவல் ஆய்வாளர் வந்த உடன் புகார் கொடுத்தீர்களா என்றால் நினைவில் இல்லை. நான் முன்விசாரணையில் சொன்னது போல் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றாலும் சொன்ன நாள், நேரத்தில், இடத்தில் அரிசி மூட்டைகள் ஏதும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. அரிசி மூட்டைகளை ஒப்படைத்தற்கான ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் காவல்துறையிடம் ஒப்படைத்தேன். வீடியோ பதிவு எதுவும் எடுத்தீர்களா என்றால் இல்லை. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. சாட்சி தானாக பத்திரிக்கையாளர்கள் வீடியோ பதிவு செய்ததாகவும் அன்றைய தினமே செய்திகளில் வெளிவந்ததாகவும் தெரிவிக்கிறார். இந்த விபரத்தை எனது புகாரிலோ போலீசார் விசாரணையிலோ குறிப்பிட்டு கூறிவில்லை என்றால் சரிதான். பொது மக்கள் யாரிடமும் சாட்சியாக இருக்க கோரி அவர்கள் மறுத்தார்களா என்றால் இல்லை. புள்ளி விபர கணக்கிற்காக எதிரிகள் மீது போட்ட பொய்வழக்கு இது என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் பொது மக்கள் யாரையும் சாட்சியாக சேர்க்கவில்லை என்றாலும் உடன் பணிபுரிபவர்களை மட்டும் சாட்சியாக சேர்த்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் காவல் ஆய்வாளர் வரவில்லை என்றால் சரியல்ல.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு. எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்-11
மயிலாடுதுறை